දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister — 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary — 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office — 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල

'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல.

"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය / எமது இல / My No. — ED/01/12/06/15/02

දිනය / திகதி / Date — 2008.11.03

சுற்றுநிருபம் - 2008/43

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்

சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்

சகல மாகாண கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல அதிபர்கள்

## க.பொ.த உயர்தர வகுப்புக்களில் தெரிவு செய்த பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பித்தல்

இன்று பூகோள மயமாக்கல் மற்றும் தொடர்பாடற் துறையில் ஏற்பட்ட விரைவான மாற்றங்களை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது சர்வதேச மொழியில் கற்பித்தல் அவசிய தேவையாக உள்ளது என்பது புலனாகின்றது. இலங்கையர்களுக்கு பழக்கப்பட்ட சர்வதேச மொழியாக இருப்பது ஆங்கில மொழியாகும். பல்கலைக்கழக கல்வி உட்பட உயர்கல்விக்கு அனுமதி பெற வேண்டுமானால் ஆங்கில அறிவு அவசியமாக உள்ளது. இதனால் 2001 ஆம் ஆண்டு முதற் கொண்டு அரச பாடசாலைகளில் (க.பொ.த உயர்தரம்) விஞ்ஞான பாடங்கள் சிலவற்றை ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் 2002 ஆம் ஆண்டிலிருந்து 6ம் தரத்தில் இருந்து தெரிவு செய்த சில பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

02. இருமொழி கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 6ம் தரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடங்கள் சிலவற்றை ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களின் தேவை கருதி 2008 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயற்படும் விதத்தில் விஞ்ஞான பாடங்களுக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட வணிக மற்றும் கலைப்பாடங்களையும் ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

03. இதனையொட்டி கல்வியமைச்சின் செயலாளரின் "ஆங்கில மொழி மூலம் க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞான பாடங்களை கற்பித்தல்" எனும் தலைப்பில் 2001.02.23 திகதியிடப்பட்ட 2001.:.05 என்ற சுற்று நிருபத்திற்கு மேலதிகமாக 2002.07.30 திகதியிடப்பட்ட 2002/17 எனும் சுற்றுநிருபம் இனிவரும் காலங்களில் இச் சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

04. இதற்கமைய 2008 முதற்கொண்டு செயற்படும் வகையில் உயிரியல், இரசாயனவியல், வணிகம் மற்றும் கலைப்பாட துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்த 10 பாடங்கள் ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் பாடங்கள் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படும்

- உயிரியல்
- பௌதீகவியல்
- இரசாயனவியல்
- இணைந்த கணிதம்
- விவசாயம்

- கணக்கீட்டுக் கல்வி
- வணிகவியல்
- பொருளியல்
- அரசியல் விஞ்ஞான மூலதத்துவம்
- புவியியல்

05. இப்பாடங்களுக்கு மேலதிகமாக வேறு பாடங்களை கற்பிப்பதற்கு ஏதேனும் பாடசாலைக்கு தேவைகள் காணப்பட்டால் கல்வியமைச்சின் அனுமதியை பெற்ற பின்பு கற்பித்தலை தொடரலாம். ஆனால் இப்பாடம் ∴ பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பித்தலுக்கு தேவையான கற்றல், கற்பித்தல் வளங்கள் கொடுக்கப்படல் மாட்டாது.

06. பாடசாலையில் ஆங்கில மொழிமூலமான வகுப்புக்கள் ஆரம்பிப்பதாயினம் கல்வியமைச்சின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஆங்கில மொழி மூலம் கற்றல் மாணவர்களின் விருப்பத்தின் பேரில் மட்டுமே நடைபெற வேண்டுமே தவிர க.பொ.த உயர்தர வகுப்புக்களுக்கு அனுமதி பெறும் பொருட்டு சுற்றுநிருபத்திற்கமைய தேவையான கல்வித் தகைமைகளினை இங்கு கொண்டிருக்க வேண்டியது முக்கியமாகும்.

07. உயர்தர வகுப்புக்களில் இருக்க வேண்டிய மாணவர்களின் தொகை சுற்றுநிருபத்திற்கமைய ஆங்கில மொழிமூல வகுப்பு மாணவர்கள் தொடர்பிலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

08. பாடசாலை மூலம் வழங்கப்பட்டுள்ள பாடத்தெரிவின் கீழ் ஒரு மாணவனுக்கு தன் விருப்பின் பேரில் ஆங்கில மூலம் கற்கும்பாட எண்ணிக்கையை தெரிவு செய்ய முடியும். பாடப்பிரிவின் படி குறிப்பிட்ட சகல பாடங்கள் அல்லது சில பாடங்களை மட்டும் அல்லது முழுப்பாடங்களையும் ஆங்கில மொழி மூலம் கற்க முடியும். பாடசாலைகள் மூலமாக அவ்விதம் ஒவ்வொரு பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்கும் மாணவர் எண்ணிக்கை தொடர்பான விபரங்களையும் ஒவ்வொரு கல்வி ஆண்டு ஆரம்பத்திலும் கல்வியமைச்சிற்கு அறியத்தர வேண்டும்.

09. க.பொ.த உயர்தர பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் போது தமது விருப்பின் போது மொழியை தெரிவு செய்ய முடியும். ஆங்கில மொழி மூலம் கற்கும் சகல பாடம் அல்லது சிலவற்றிற்கு அல்லது ஒரு பாடத்திற்கு மட்டும் அல்லது அதற்கு மேல் ஆங்கில மொழி மூலம் தோற்ற முடியும். அது போல் சகல பாடங்களையும் சிங்கள அல்லது தமிழ் மொழி மூலமான பரீட்சைக்கு தோற்ற முடியும். இந்த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மொழி மூலத்தை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது தெரியப்படுத்தல் அவசியம். அதன் பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலத்தை பாடத்தின் முன் பகுதியில் தனி தனியாகவும், பெறுபேற்று ஆவணத்திலும் தெளிவாகத் தெரியப்படுத்தப்படும்.

ஆ.சே.ஜே. பண்டார
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 1. | தலைவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு | – தகவலுக்காக |
| 2. | தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு | – தகவலுக்காக |
| 3. | பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் | – எடுக்க வேண்டிய நடவடிக்கைக்காக |
| 4. | பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம் | – எடுக்க வேண்டிய நடவடிக்கைக்காக |
| 5. | கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், –கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | – எடுக்க வேண்டிய நடவடிக்கைக்காக |